பகுதிப்பிரிவு: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

அன்பளிப்பு
விலை
ரூபா
6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 தை 10 புதன்கிழமை (24-01-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 59

## பொறியியல் அணிச் சிப்பாய்களே ஹெலியுடன் காணாமற் போயினர்!

### படைகளுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு

கொழும்பு, ஜன. 24

ஹெலிக்கொப்டர் காணாமல்போனதால் ஏற்பட்டுள்ள இழப்பை விட அதில் பயணம் செய்த — பொறியியல் படை அணியைச் சேர்ந்த — முப்பது சிப்பாய்கள் காணாமல் போயிருப்பதே ஸ்ரீலங்கா பாதுகாப்புத் துறைக்கு பேரிழப்பாகும்.

அவதானிகளை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி இவ்வாறு தெரிவித்தது.

பொறியியல் அணியைச் சேர்ந்த இச்சிப்பாய்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சியோடு, நிலக்கண்ணிவெடிகள் மற்றும் வெடிகுண்டு

[6 ஆம் பக்கம் பார்க்க]

காணாமற்போன சமயம்

## ஹெலியுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்தது!

கொழும்பு, ஜன. 24

கட்டுப்பாட்டு நிலைய ''ராடர்'' திரையிலிருந்து ஹெலிக்கொப்டர் திடீரென மறைந்த சமயத்தில் கட்டுப்பாட்டு நிலையத்துக்கும் ஹெலிக்கொப்டர் விமானிக்கும் இடையில் தொடர்பு இருக்கவில்லை; சம்பந்தப்பட்ட தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்தது. இதனால் அவ்வேளையில் ஹெலிக்கொப்டர் எப்பகுதியில் பறந்து கொண்டிருந்தது என்பதை திட்டவட்டமாக அறிந்து கொள்ள முடியாமல் போய்விட்டது. அத்துடன் ஹெலிக்கு திடீரென ஏற்பட்ட கதி குறித்தும் விமானி அறிவிப்பதற்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு கடற்பகுதியில் காணாமல் போன ஹெலியைக் கண்டுபிடிக்க அரசு செஞ்சிலுவை உதவியை நாடுகிறது!

### வாரம் மூன்று நாள்கள் படகுச் சேவை

சாவகச்சேரி, ஜன. 24

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று முதல் திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் மட்டுமே நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

அந்த நாள்களில் இரவும், பகலும் சேவை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

### கப்பல்கள் தாமதித்தே வந்தன

பருத்தித்துறையில் பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் 'லங்கா முடித' 'லங்கா கல்யாணி' கப்பல்கள் நேற்று தாமதித்தே பருத்தித்துறை வந்து சேர்ந்தன.

வழமையாக காலை 7.00 மணிக்கு அல்லது 8.00 மணிக்கு இக்கப்பல்கள் பருத்தித்துறைக்கு வருவது வழக்கம்.

நேற்று 'லங்கா முடித' கப்பல் பகல் 12.30 மணிக்கும், 'லங்கா கல்யாணி' கப்பல் பிற்பகல் 1.30 மணிக்குமே பருத்தித்துறை வந்து சேர்ந்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தேடுதல் முயற்சியில் படையினர் தோல்வி

சாவகச்சேரி, ஜனவரி. 24

வடபகுதிக் கடலில் நேற்று முன்தினம் நண்பகல் காணாமற் போனதாகக் கூறப்படும் எம்.ஐ. 17 ரக ஹெலிக்கொப்டரைத் தேடும் முயற்சியில் ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினர் வெற்றி பெற முடியாமல் போனதை அடுத்து, செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உதவியை ஸ்ரீலங்கா அரசு நாடியிருக்கின்றது.

நேற்று தொடர்ந்து வடமராட்சி வடக்கு கடல் பரப்பின் மீது ஹெலிக்கொப்டரை தேடும் முயற்சியில் ஸ்ரீலங்காப் படைகள் ஈடுபட்டன.

வடக்குக் கடல் பரப்பின் மீது பறந்தவாறு இரண்டு புக்காரா குண்டுவீச்சு விமானங்கள் உட்பட மூன்று விமா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சிலாவத்துறையில் விமானக் குண்டு வீச்சு

### இருவர் படுகாயமடைந்தனர்

சாவகச்சேரி, ஜன.42

கடந்த ஞாயிறன்று மாலை 4.45 மணியளவில் மன்னார் மாவட்டம் சிலாபத்துறையில் ஸ்ரீலங்கா வான் படையின் இரண்டு யுத்த விமானங்கள் மக்கள் குடியிருப்புக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## விமானங்கள் வரும் போது கடற்படையினர் ரோந்து

பலாலி விமானப்படைத் தளத்தில் விமானங்கள் ஏறி இறங்கும் வேளைகளில் ஸ்ரீலங்கா கடற்படையினர் வடக்கு கடற்பரப்பில்ரோந்து சென்று அந்த விமானங்களுக்கு பாதுகாப்பு அளித்து வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

விமானங்கள் ஏறி, இறங்கும் போது தொண்டமானாறு, காங்கேசன் துறை, கடற்பிராந்தியத்தில் கடற்படையினர் சுறுசுறுப்பாக கடல் ரோந்தில் ஈடுபடுகின்றனர். (உ-80-173)

## கொக்குவில் கிழக்கில் புலிகள் தாக்குதல்!

சாவகச்சேரி, ஜன. 24

வலிகாமத்தில் கொக்குவில் கிழக்கில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைபபுலிகள் நேற்று முன்தினம் மதியம் 12 மணியளவில் தாக்குதல் நடத்தினர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் படையினருக்கு ஏற்பட்ட சேத விவரம் தெரியவரவில்லை

நேற்று முன்தினம் கந்தரோடைப் பகுதியிலும் படையினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தியது தெரிந்ததே.

அதற்கு முதல் நாள் சுன்னாகத்திலும் தாக்குதல் நடத்தி இருந்தனர்.

சமீப நாள்களாக வலிகாமத்தில் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொக்குவில் கிழக்கில் நடத்தப்பட்ட தாக்குதலை பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகமும் ஊர்ஜிதம் செய்துள்ளது. (இ-3)

## ஹாட்லி கல்லூரி அருகில் ஷெல் வீழ்ந்து வெடித்தது

### சிதறல்களால் ஆய்வு கூடம் சேதம்

மந்திகை, ஜன. 24

நேற்று முன்தினம் இரவு 9.55 மணி அளவில் பலாலியில் இருந்து ஏவப்பட்டஷெல்களில் ஒன்று பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு முன்னால் உள்ள கல்லூரி வீதிக் கரையோரத்தில் விழுந்து வெடித்தது. மற்றும் ஒரு ஷெல் ஆத்தியடி குடியிருப்புப் பகுதியில் வீழ்ந்து வெடித்தது. கல்லூரி வீதிப்பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லின் சிதறல்களால் ஹாட்லிக் கல்லூரியின் ஆய்வு கூடம் சிறிது சேதம் அடைந்தது.

ஷெல் பயங்கர சத்தத்துடன் வெடித்த சமயம், இதற்கு சமீபமாக உள்ள மெதடிஸ்த மகளிர் கல்லூரியில் தங்கியிருந்த நூறுக்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்த மக்கள் பெரும் பதற்றம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு தாக்குதல் பற்றிய இரகசியம் புலிகளுக்கு முன்பே கிடைத்து விட்டது

### இதனாலேயே பயனளிக்கவில்லை என்கிறது லக்பிம

கொழும்பு, ஜன. 24

கிழக்கில் அரசுப் படைகள் பெரும் எடுப்பில் மேற்கொண்ட ''சூரிய ஒளிக் கற்றை'' இராணுவ நடவடிக்கை பலனளிக்காமல் போனதற்கு, அந்த நடவடிக்கை பற்றிய முழு இரகசியங்களும் நேரகாலத்துக்கு முன்னேயே விடுதலைப் புலிகளின் கைகளுக்கு கிடைத்தமையே காரணமாகும்.

இவ்வாறு இராணுவ அதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசுக்கட்டளைகளை வங்கியிலிட அறிவுறுத்து

## தபாலகத்தில் பணம் இல்லை

சாவகச்சேரி, ஜன. 24

யாழ். பிரதம தபாலகத்துக்கு அனுப்பட்ட காசுக்கட்டளைகளை (மணிஓடர்களை) வைத்திருப்போர் அவற்றை வங்கிகளில் இடுமாறு யாழ். பிரதம தபாலக அதிபர் திரு. சு. கோடீஸ்வரன் அறிவுறுத்தியுள்ளார்.

தற்போது நிலவும் திரவப் பணத் தட்டுப்பாட்டால் தமது கொடுப்பனவு பிரிவை இயக்க முடியாதுள்ளதாகவும்—

வெளிநாட்டு, உள்நாட்டு காசுக்கட்டளைகளை வைத்திருப்பவர்கள் அவற்றை வங்கியில் இட்டு மாற்றிக் கொள்ளலாம் என்றும் — அவர் தெரிவித்தார்.

காசுக்கட்டளைகள் காலம் முடிவடைந்திருந்தாலும் அவற்றை வைப்பிட முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3-7)

# பயிலுநர் ஆசிரியர் நேர்முகப் பரீட்சை

## வவுனியாவில் 2ஆம் திகதி நடக்கும்

கொழும்பு, ஜன. 24

பயிலுநர் ஆசிரியர்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு எதிர்வரும் 2ஆம் திகதி வவுனியா கல்வித் திணைக்களத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி நடந்த ஆசிரியர் போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இந்த நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

53 ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான இந்த நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் வவுனியா அரச அதிபர் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நேர்முகப் பரீட்சைக்கு வருவோர் தேசிய அடையாள அட்டை, கல்விச்சான்றிதழ்கள், பாடசாலை விடுகைப் பத்திரம், பிறப்புச் சான்றிதழ் மூலப்பிரதி, வதிவிடச் சான்றிதழ், 1992, 93, 94ஆம் ஆண்டுகளுக்கான தமது அல்லது தமது பெற்றோரின் பெயர் அடங்கிய வாக்காளர் அட்டவணை, பிரதேச செயலரினால் கையொப்பம் இடப்பட்ட கிராம சேவையாளரினால் வழங்கப்பட்ட நற்சான்றிதழ் என்பனவற்றை டுத்துவர வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## பொதுசன மாதாந்த உதவிப்பணம்

சாவகச்சேரி, ஜன. 24

பொதுசன மாதாந்த உதவிப்பணக் கொடுப்பனவுக்கு விண்ணப்பித்து இதுவரை இக்கொடுப்பனவைப் பெறாத உடுவில் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்தோரையும் —

இக்கொடுப்பனவுக்குத் தகுதியுள்ள அப்பிரிவைச் சேர்ந்தவர்களையும் —

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் அமைந்துள்ள சாவகச்சேரி நகர வலய மேலதிக உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு உடனடியாக சமுகமளிக்குமாறு மேலதிக உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் கோரியுள்ளார். (இ)

## தாதியர் பரீட்சை அனுமதி அட்டை தபாலில்

சாவகச்சேரி, ஜன. 24

எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள மாணவ தாதியர்களைப் பயிற்சிக்கு தெரிவுசெய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் நேற்று தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன. என்றும் =

பரீட்சார்த்திகள் தத்தமது தபாலகங்களுடன் தொடர்பு கொண்டு அனுமதி அட்டைகளைப் பொறுமாறும் —வலயம் ஒன்றின் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் கேட்டுள்ளார். (இ-3)

## சவர்க்கார விநியோகம் ஆரம்பம்

மிருசுவில், ஜன. 23

வலிகாமம் பகுதியிலே இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் தங்கியுள்ள மக்களுக்கு அவர்கள் தங்கியிருக்கும் பகுதிகளில் உள்ள நிரந்தர கிராம சேவையாளர் மூலம் ஓர் உறுப்பினருக்கு ஒரு கட்டி என்ற அடிப்படையில் 'லைவ் போய்' சவர்க்காரம் கடந்த திங்கட்கிழமை முதல் வழங்கப்படுகிறது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு இடம் பெயர்ந்த மக்களுக்கென இதனை இலவசமாக வழங்கியுள்ளது.

ஒரு குடும்பத்துக்கு ஆகக்கூடியது ஐந்து சவர்க்காரக் கட்டிகள் வழங்கப்படுகின்றன. [இ-111]

## கிணறுகளுக்கு குளோரின்

கரணவாய், ஜன. 24

பொலிகண்டிப் பகுதியிலுள்ள நல்ல தண்ணீர் கிணறுகளுக்கு குளோரின் போடப்பட்டுவருகின்றது.

பொலிகண்டி கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம் இதில் ஈடுபட்டு வருகிறது. (இ-80)

## இந்து இளைஞர் பேரவை முதலுதவி பயிற்சி வகுப்பு

இந்து இளைஞர் பேரவையின் வன்னிப் பிரிவினர் முதலுதவி பயிற்சி வகுப்புகளை நடத்தவுள்ளனர்.

இவ்வகுப்புகள் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் மட்டுமே நடைபெறும்.

ஜி.சீ.ஈ. (சாதாரணதரம்) சித்தியடைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் மேற்படி விண்ணப்பங்களை கிளிநொச்சி வர்த்தக சங்க காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் வன்னி மாவட்ட இந்து இளைஞர் பேரவையினர் தெரிவித்துள்ளனர். (இ-88-7)

## ஆண்டு இறுதிக்குள் சர்வசன வாக்கெடுப்பு

கொழும்பு, ஜன. 24

இனப்பிரச்சினைக்கு தீர்வாக அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகள் குறித்து இவ்வாண்டு இறுதிக்குள் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு அரசாங்கம் உத்தேசித்திருப்பதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன,

கடந்த வாரம் வெளியிடப்பட்ட சட்ட வரைவுப் பிரதிகள், நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தால் அரசமைப்பு சீர்திருத்தம் சம்பந்தமான நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் உள்ள 21 அங்கத்தவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-3)


## ஆங்கில தட்டச்சு யந்திரங்கள் தேவை

விற்க விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாக உத்தியோகஸ்தர்
உதயன் பணிமனை
சரசாலை தெற்கு,
[கனகம்புளியடிச்சந்தி அருகாமையில்]
சாவகச்சேரி.

## பி. ஜெ. பர்னாண்டோ





கண்ணாடி வழங்குபவர் — பல் கட்டுபவர்

கண்டி வீதி, சாவகச்சேரி
(தெய்வேந்திரா தியேட்டர் முன்பாக).

முக்கிய குறிப்பு:
கண்ணாடி ஓடர்கள் கொழும்பிலிருந்து வந்திருப்பதால் ஓடர்காரர்கள் வந்து கண்ணாடிகளை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(40001)


## இதய அஞ்சலி

### சுப்பிரமணியம் கதிர்காமத்தம்பி

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு அயராது உழைத்து அகால மரணமடைந்த இளைப்பாறிய அதிபர், புலோலியைச் சேர்ந்த சுப்பிரமணியம் கதிர்காமத்தம்பிக்கு எமது இதய அஞ்சலிகள்.

பிரதிக் கல்விப்பணிப்பாளர்,
உத்தியோகத்தர்களும்,
ஊழியர்களும்.

கோட்டக்கல்வி அலுவலகம்,
சாவகச்சேரி.

(40003)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரமநாதன் பரமேஸ்வரி

புத்தூர் கிழக்கு முருகன் திடலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டிருந்த பரமநாதன் பரமேஸ்வரி திங்கட்கிழமை (22 - 01 - 96) காலமானார்

அன்னார் காலஞ்சென்ற க. பரமநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இளையதம்பி—முத்தாச்சி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், அப்புத்துரை, இராசம்மா, கதிரவேலு, நடேசன், சின்னத்துரை (இடைக்காடு மகா வித்தியரலயம்), சின்னமணி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சாவகச்சேரி சப்பச்சி மாவடிப் பிள்ளையார் ஆலய தெற்கு வீதியில் நேற்று (23 - 01 - 96) நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
இ. அப்புத்துரை
புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

தற்போதைய முகவரி
சப்பச்சி மாவடி,
சாவகச்சேரி.

(40231)

### இராமநாதன் திசைவீரசிங்கம்

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த இராமநாதன் திசைவீரசிங்கம் 19-01-96 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திசைவீரசிங்கம் இராமநாதன் [ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்], — திருமதி புவனேஸ்வரி இராமநாதன் (ஓய்வு பெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்பு மகனும், திருமதி ச. மனோகரி (கனடா), திருமதி ம. மனோராஜி (ஆசிரியை, மட்டுவில் அ. மி. த. க. பா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சு. சத்தியானந்தன் (கனடா), எஸ். ஆர். மகேந்திரன் (அதிபர், கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரவீன், பைரன் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

ஈமக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
எஸ். ஆர். மகேந்திரன்
[மைத்துனர்]

'சிங்க கிரி'
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(40002)

### சின்னத்தம்பி தம்பிஐயா

வேலணை கிழக்கை பிறப்பிடமாகக் கொண்டவரும். கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய சின்னத்தம்பி தம்பிஐயா 23 - 01 - 1996 அன்று நுணாவிலில் சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி தெய்வானை அவர்களின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற திருமதி கந்தையா தங்கம்மா, காலஞ்சென்ற மருதையா (ஆசிரியர்) ஆகியோரின் அருமைச் சகோதரனும், திருமதி ம. பாக்கியலட்சுமியின் அன்பு மைத்துனரும், க. மகாலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்), க. சோதிலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்), திருமதி இராசரெத்தினம் சரஸ்வதி, செல்வி க. தங்கலெட்சுமி, S P. சாமி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், திருமதி பொன்னுச்சாமி வீரலட்சுமியின் அன்பு சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-01-1996 (செவ்வாய்க்கிழமை) மாலை 4-00 மணிக்கு நுணாவிலில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
க. சோதிலிங்கம்

C/o. கருணலிங்கம்
மணியாரன் வளவு,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(40238)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் தற்கொலைப் படை பற்றிய தகவலால் காத்தான்குடியில் பதற்றம்

## பிரதி அமைச்சர் ஹெலியில் கூட்டிச் செல்லப்பட்டார்

மட்டக்களப்பு, காத்தான் குடி பிரதேசத்துக்குள் புலிகளின் தற்கொலைப்படை புகுந்துவிட்டதாக வெளியான தகவலால் கடந்த வெள்ளியன்று அங்கு பெரும் பதற்றம் நிலவியது.

சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:-

கடந்த வெள்ளிக்கிழமை காத்தான்குடியில் பொருள் காட்சி ஒன்று நடைபெற இருந்தது.

அத்துடன் மத்திய பஸ் தரிப்பு நிலையத் திறப்பு விழா, ஆரையம்பதியில் அறபா மாதிரிக் கிராமத் திறப்பு விழா ஆகியவையும் இடம்பெற இருந்தன.

மட்டக்களப்பில் தொழில் நுட்பக் கல்லூரி வைபவம் ஒன்றும் நடைபெற இருந்தது.

மட்டக்களப்பு ஏம். பியும் பிரதி தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சருமான எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் இந்த வைபவங்களில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ள காத்தான்குடி வந்திருந்தார்.

புலிகளின் தற்கொலைப் படைபற்றிய தகவலினால் இந்த வைபவங்கள் அனைத்தையும் பாதுகாப்புப் படையினர் ரத்துச் செய்தனர்.

அத்துடன் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ், படையினரால் விசேட ஹெலிக்கொப்டர் ஒன்றில் ஏற்றி பாதுகாப்பாக கொழும்புக்கு அனுப்பப்பட்டார்.

அதே சமயம், இதற்கு அடுத்த நாளான சனிக்கிழமை காத்தான்குடிக்கு விஜயம் செய்ய இருந்த பிரதி போக்குவரத்து அமைச்சர் றெஜி ரணதுங்காவின் விஜயத்தையும் படையினர் ரத்துச் செய்திருந்தனர். (இ)

# பார்சல் குண்டு வெடித்து இரு பொலிஸார் காயம்

## மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு, ஜன. 24

மட்டக்களப்பில் ஆரைப்பற்று சோதனை நிலையத்துக்கு அருகில், பார்சல் குண்டொன்று வெடித்ததில் இரு பொலிஸார் காயமடைந்து மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை காலை 11-30 மணியளவில் நடந்த இந்த சம்பவம் குறித்து மேலதிக விவரங்கள் வெளியாகவில்லை.

அப்பகுதியில் படையினர் தேடுதல் நடத்தினார்கள். (இ-3)

## வீரச்சாவு

சாவகச்சேரி, ஜன. 24

வன்னி மாவட்டத்தில் சனியன்று இராணுவத்தினருடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதல் ஒன்றில் கப்டன் நாவரசன் (மகாலிங்கம் கஜேந்திரன் — வவுனியா) வீர மரணமடைந்தார். (இ-3)

## சுகாதாரக் குழு யாழ் வருமாம்

கொழும்பு, ஜன. 24

யாழ். அரசினர் ஆஸ்பத்திரியை இயக்க வைப்பதற்காக ஆரம்ப நடவடிக்கையை மேற்கொள்வதற்காக வைத்தியர்கள், தாதிமார்கள், நிர்வாக அதிகாரிகள், சிற்றூழியர்கள் கொண்ட சுகாதாரக் குழு ஒன்று இவ்வார மத்தியில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படும் என்று சுகாதார அமைச்சர் பௌசி தெரிவித்தார். (இ-3)

# கிழக்கு எல்லைக் கிராமங்களிலிருந்து பெருமளவு சிங்களவர் இடம்பெயர்வு

கொழும்பு, ஜன. 24

கிழக்கில் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதை அடுத்து—

அதன் விளைவாக தாங்களும் தாக்குதல்களுக்கு ஆளாகலாம் என்ற அச்சத்தில், கிழக்கு எல்லைப் புறங்களில் உள்ள சிங்கள குடியேற்றக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் ஆயிரக் கணக்கில்—தமது குடியேற்றக் கிராமங்களை விட்டு வெளியேறி— பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர்.

கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கும் அரசுக்கு குடியேற்ற சிங்களவர்களின் இடம்பெயர்வு புதிய தலையிடியை உருவாக்கியிருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

சிங்களக் குடியேற்றக் கிராமங்கள் பலவற்றில் அரைவாசிக்கு மேற்பட்ட குடியிருப்புகள் காலியாகிவிட்டனவாம்.

பொலன்னறுவ மாவட்டத்தில் உள்ள எல்லைப்புறக் கிராமங்கள், வெலிகந்த பகுதி மற்றும் மகாவலி குடியேற்றப் பகுதிகளில் உள்ள கிராமங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த மக்களும் பாதுகாப்புத் தேடி வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர்.

குடியேற்ற கிராமங்களுக்கு அரசாங்கப் படைகள் உறுதியான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கும் என்று நேரில் எடுத்துக் கூறி குடியேற்ற வாசிகளின் இடம் பெயர்வைத் தடுப்பதற்காக பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை தமது பரிவாரங்களுடன் எல்லைப்புறப் பகுதிகளுக்கு நேரடியாக விஜயம் செய்து வருவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இதற்கிடையில்—

திருகோணமலை மாவட்டம் கலாரவ, கும்புறுப்பிட்டி, குச்சவெளி மற்றும் பிரதேசங்களைச் சேர்ந்த— இரண்டாயிரத்துக்கும் அதிகமான— சிங்கள மக்கள் புலிகளின் தாக்குதல்களுக்கு அஞ்சி திருகோணமலை, மூதூர், கிண்ணியா, மொறவெவ, நிலாவெளிப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து அகதிகளாக வந்திருப்பதாக திருகோணமலை அரச அதிபர் அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர். (உ)

### சட்டவிரோதமாக நுழைந்த

# ஈழத்தமிழரை திருப்பி அனுப்ப பிரான்ஸ் முடிவு

கொழும்பு, ஜன. 24

சட்டவிரோதமாக பிரான்ஸுக்குள் நுழைந்து அங்கு குடியேறியுள்ள ஈழத் தமிழர்களை திருப்பியனுப்புவது என அந்த நாட்டு அரசு முடிவு செய்திருப்பதாக "தசண்டே ரைம்ஸ்" பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கின்றது,

இந்த விடயம் குறித்து பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஹார்வ் டி சார்ட்டி ஸ்ரீலங்கா வெளிவிகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமரைச் சந்தித்த போது பேசியதாகவும் அப்பத்திரிகை தெரிவித்தது.

ஏறத்தாழ 60 ஆயிரம் ஈழத் தமிழர்கள் அங்கு வசிப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளதாகவும்—

அவர்களில் பெரும்பாலானோர் வீஸா காலவதியான பின்னரும் அல்லது நாட்டுக்குள் சட்டவிரோதமாக நுழைந்த பின்னரும் அங்கு தங்கியிருப்பதாக அந்த பத்திரிகை மேலும் தெரிவித்தது.

சுவிஸர்லாந்து தனது நாட்டில் சட்ட விரோதமாகத் தங்கியிருக்கும் ஈழத் தமிழர்களை ஸ்ரீலங்காவுக்கு நாடு கடத்த [illegible] தாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது. (உ)

### 40 வருட காலப்பிரச்சினைக்கு

# ஒரு சில வருடங்களுக்குள் தீர்வுகண்டு விட முடியாது

## சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு, ஜன. 24

கடந்த 40 வருடங்களாக நாட்டில் வேரூன்றியுள்ள இனப்பிரச்சினைக்கு ஒரு சில வருடங்களுக்குள் அல்லது சில மாதங்களுக்குள் முழுமையான தீர்வு காண முடியாது. ஆனால் இந்த வருடத்துக்குள் இனப்பிரச்சினையில் பெரும்பாலான விடயங்களுக்கு தீர்வு காணப்படும்.

ஜனாதிபதி சந்திரிகா நிட்டம்புவவில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும்கூறியதாவது.

இனப்பிரச்சினைக்கு நாம் முன்வைத்துள்ள அரசியல் யோசனையை எதிர்க்கட்சி எதிர்க்கவும் இல்லை. ஆதரிக்கவும் இல்லை. மௌனம் சாதிக்கிறது. அதற்கு மாற்று யோசனை எதனையும் முன்வைக்கவில்லை.

அவர்கள் பொய்பிரசாரங்களை மேற்கொள்கிறார்கள். தனிப்பட்ட வாழ்க்கைக்கு கூட மாசு கற்பிக்க முற்படுகின்றனர். — என்றார். (இ-[illegible])

# நிதித்துறை அறிவித்தல் வைப்பகத்திற்கு வருக

கீழ்க் குறிப்பிடுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு நாளை 25 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை கோரி உள்ளது.

★ சின்னத்துரை அன்னம் — நுணாவில், வட்டுக்கோட்டை.

★ இரத்தினம் பரமநாதன் — A. O. அலுவலகம். யாழ். வைத்தியசாலை ஊழியர்.

★ தம்பியையா பரஞ்சோதி — செல்வா இல்லம், ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு.

★ முத்துக்குமாரு தர்மலிங்கம் — இல. 05, குறோசெற் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

★ சதானந்தம் குணபூரணி — 6/2, புறாடி முன் ஒழுங்கை அரியாலை மேற்கு. அரியாலை.

★ செல்வராசா நாகரட்ணம் — இல 22, 4 ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை கிழக்கு, யாழ்ப்பாணம்.

★ நடராசா இரட்ணசிங்கம் — 5 ஆம் குறுக்கு வீதி, கொழும்புத்துறை கிழக்கு, யாழ்ப்பாணம்.

★ நடராசா வரதலட்சுமி — இல. 15, 2 ஆம் குறுக்கு வீதி, கொழும்புத்துறை கிழக்கு, யாழ்ப்பாணம்.

★ நடராசா இரட்ணகோபால் — இல. 07, 4 ஆம் குறுக்கு வீதி, கொழும்புத்துறை கிழக்கு, யாழ்ப்பாணம்.

★ ஜெகநாதன் இராசலட்சுமி இல. 07, 4 ஆம் குறுக்கு வீதி, கொழும்புத்துறை கிழக்கு, யாழ்ப்பாணம்.

★ யோகநாதன் (கணேசன்) அன்னலட்சுமி – நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை கிழக்கு, யாழ்ப்பாணம்.

★ சின்னத்தம்பி நடராசா — இல. 07, 4 ஆம் குறுக்கு வீதி, கொழும்புத்துறை கிழக்கு, யாழ்ப்பாணம்.

★ சிவகுருநாதன் வசந்தராணி இல. 22/2, 2 ஆம் குறுக்கு வீதி, கொழும்புத்துறை கிழக்கு, யாழ்ப்பாணம்.

★ புவனேந்திரநாதன் சந்திரராணி – டச்சு வீதி, தொல்புரம், சுழிபுரம்.

★ கந்தையா கந்தசாமி — இல. 17, 2ஆம் குறுக்கு வீதி, கொழும்புத்துறை கிழக்கு, யாழ்ப்பாணம்.

★ பூலோகராசா பாக்கியநாதர் — பத்தனை வீதி, தொல்புரம், சுழிபுரம்.

★ சபாபதிப்பிள்ளை முருகையா — பத்தனை வீதி, தொல்புரம், சுழிபுரம்.

★ கணபதிப்பிள்ளை நடராசா — 2 ஆம் வீதி, கொழும்புத்துறை கிழக்கு, யாழ்ப்பாணம்.

★ கணபதிப்பிள்ளை கணேசு — இல 33, 4 ஆம் குறுக்கு வீதி, கொழும்புத்துறை கிழக்கு, யாழ்ப்பாணம்.

★ இரத்தினம் சிவபாலன் — இல. 20, 2 ஆம் குறுக்கு வீதி, கொழும்புத்துறை கிழக்கு, யாழ்ப்பாணம்.

★ மார்க்கண்டு ரஞ்சிதநாதன் — இல. 13, கொழும்புத்துறை கிழக்கு, யாழ்ப்பாணம்.

★ கந்தையா இராசலிங்கம், கட்டுவன் தெற்கு, தெல்லிப்பளை.

★ பிள்ளையான் செல்லர் — விக்னேஸ்வரா வீதி, சங்கானை.

★ கதிர்காமு குணநாயகம் (ஆசிரியர்) — ஏழாலை வடக்கு, ஏழாலை.

★ முத்தையா மகாதேவன் (ஆசிரியர்) — உரும்பிராய் கிழக்கு, யாழ்ப்பாணம்.

★ செல்வரெட்ணம் ஜெகநாதன் (Electricion — இணுவில் MC.Ltd Private Hospital) காங்கேசன்துறை வீதி, இணுவில்.

★ திருமதி விசுவலிங்கம் பவளம்மா அல்லது திருமதி கவிராஜசிங்கம் காஞ்சனமாலை — நரியிட்டான், மல்லாகம்.

★ முத்துக்கிருஷ்ணன் பாலச்சந்திரன் அல்லது திருமதி பாலச்சந்திரன் ஞானாமிர்தம் (இளைப்பாறிய ஆசிரியர்) — 65/18, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.

★ திருமதி சிவராசா பூலோகறம்பை — அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

★ திருமதி சதாசிவம் துரிகாதேவி அல்லது திரு. சதாசிவம் — அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

★ திருமதி சுப்பிரமணியம் துரைராணி அல்லது திரு. சுப்பிரமணியம் — 5, பூநாரிமரத்தடி, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

★ திருமதி காசிலிங்கம் திலகவதி — கற்பகப்பிள்ளையார் வீதி, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

★ நமசிவாயம் அருணாசலம் அல்லது திருமதி நமசிவாயம் ஞானலட்சுமி—'நமசிவாய ஞானகலை', நீலியம்பனை வீதி, மல்லாகம்.

★ நாராயணபிள்ளை—இடைக்காட்டார்ஈஸ்வரன், இடைக்காடு, அச்சுவேலி.

★ திருமதி தங்கமலர் பாலசிங்கம் — ஆனந்தன் வளவு, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

★ சரவணமுத்து பேரின்பநாயகம் அல்லது பேரின்பநாயகம் யோகமலர் — விதானையார் ஒழுங்கை, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

★ வேலன் இராசி — காவலோடை, ஆவரங்கால் கிழக்கு, புத்தூர், யாழ்ப்பாணம்.

★ பாலசுந்தரம் குணமணி — 20, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி.

★ திருமதி தில்லையம்பலம் உத்தமி – சுழிபுரம் தெற்கு, சுழிபுரம்.

★ றட்ணசிங்கம் ரூபன் — 40/02, Chancodon Road, சுண்டிக்குழி.

★ பொன்னையா குணரட்ணம் — இல. D20, குருநகர் தொடர்மாடி, குருநகர்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய நுணுக்குச் காட்டி, படம் வரைதல் பலகை, அதற்குறிய 'T' முக்கோணம், 50 மீற்றர் அளக்கும் ரேப் றோல் விற்பனைக்குண்டு. தொடர்பு: நவம் மின் அகம், நுணாவில் சந்தி, சாவகச்சேரி. (40233)

1995ஆம் ஆண்டு நடந்து முடிந்த கணிதம், விஞ்ஞானம், தமிழ் (O/L) வினாக்கள் விற்பனையாகின்றன. பூபாலசிங்கம் புத்தகசாலை, இல;8, நவீன சந்தை, சாவகச்சேரி. (சி-2948)

## தவறிவிட்டது

மானிப்பாயைச் சேர்ந்த மறிச்சேட் மோகனதாஸ் ஆகிய எனது A/L, O/L. சான்றிதழ்களும், ஏனைய வடக்கு – கிழக்கு மாகாண சபை விளையாட்டுச் சான்றிதழ்களும், பிறப்புச் சான்றிதழ்களும் தவறவிடப்பட்டுள்ளன, தவறுதலாக எடுத்தோர் கிளீன்கட் ஸ்தாபனம் சாவகச்சேரியில் ஒப்படைக்கவும். (39999)

## வியாபாரிகளுக்கு

இமிரேஷன் கோல்ட் கவறிங் நகைகள், அழகு சாதனப்பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள், பிளாஸ்டிக் வகைகள், லேஸ் நூல் வகைகள், சிறுவர்களின் பாவனைப் பொருள்கள், விளையாட்டுப் பொருள்கள், சில்வர் பாத்திரங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். ஜெயா அழகு மாடம் யாழ். வீதி, கிளிநொச்சி. [நீதிமன்றம் முன் பாக). [சி/3176]

## விற்பனையாகிறது

''சனீஸ்வர மாற்றம் உங்களுக்கு எப்படி?. V.A. சிவராசாவினது என்று கேட்டு வாங்குங்கள். விற்பனை முகவர்:- ஆசிர்வாதம் புத்தகசாலை, சாவகச்சேரி, [யாழ்ப்பாணம். ஸ்ரீசுப்பிரமணியம் பொத்தகசாலைக்கு முன்பாக) (3997)

## போத்தல் தேவை

வெற்று ஹார்லிக்ஸ்/வீவா, ஜாம் போத்தல்களை கொடிகாமத்தில் கண்ணன் களஞ்சியம், கௌரி வியாபார நிலையம், ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்சில் ஒப்படைத்து பணத்தைப் பெற்றுக்கொள்ளவும். ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டட். (சி-3167)

## காணவில்லை

கொழும்புத்துறை கிழக்கு, இல. 62, நாலாம் குறுக்குத் தெருவில் வசித்த

திருமதி
சர்வணமுத்து
சிவானந்தம்

அவர்களை 30-10-95 முதல் காணவில்லை. வயது 70. இவரைக் கண்டவர்கள் அல்லது தகவல் தெரிந்தவர்கள் தயவுசெய்து உடன் தொடர்பு கொள்ளவும்.

திரு. வே. தருமலிங்கம்,
C/o வண. அன்புராஜ்,
பெந்தேகோஸ்து சபை,
சாவகச்சேரி.
(40235)

## வீடு தேவை

பருத்தித்துறையில் வீடு வாடகைக்குத் தேவை. வாடகை முற்பணம் கொடுக்கப்படும். தொடர்புகொள்ளவும். சிவகுமரன் பிடவை மாளிகை, பருத்தித்துறை. (40081)

## கிளிநொச்சியில் சிரமதானம்

கிளிநொச்சி, ஜன. 24

கிளிநொச்சி நகரில் உள்ள றொட்ரிகோ மைதானம் கடந்த ஞாயிறு சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

இந்த மைதானம் கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான விளையாட்டு மைதானம் ஆகும்.

சிரமதான வேலையை கிளிநொச்சி மாவட்ட பல்கலைக் கழக மாணவர்களும் கெயர் சர்வதேச நிறுவனத்தில் பணிபுரியும் தொண்டர்களும் இணைந்து மேற்கொண்டனர். (இ-ரி)

## காமினியின் மகன் அரசுடன் சேரலாம்

கொழும்பு, ஜன. 24

காமினி திசநாயகாவின் மகனும் பாஹததும்பற ஐ. தே. க. அமைப்பாளருமான நவின் திசாநாயக்காதொடர்பாக ஐ. தே. கட்சி மாற்றாந்தாய் மனப்போக்கைக் கடைப்பிடித்து வருவதால் அவரின் கவனம் தற்போது பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பக்கம் ஈர்க்கப்பட்டுள்ளதாகவும் –

அவர் ஏற்கனவே அரசாங்கத்தின் முக்கிய பிரமுகர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளார் எனவும்— ''ராவய'' தெரிவிக்கிறது. (இ-10)

## விசேட பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் 25-01-96 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் காரியாலயம் அமைந்துள்ள சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

எஸ். சிவலிங்கராஜா,
செயலாளர்-

(சி-3179)

## ஆண்டு - 5
## (புலமைப் பரிசில்) பரீட்சை

மாதிரி பயிற்சி வினாத்தாள்கள்
(விடைகளுடன்)

எல்லா பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

வெளியீடு:
**BOND,** யாழ்ப்பாணம்.
(40234 )

## கண்ணீர் அஞ்சலி

அமரர்
**டானியேல் அன்ரனிப்பிள்ளை**
(இளைப்பாறிய தொழில் நுட்ப உத்தியோகத்தர்)
திரு. அ. ம. இராஜ்குமார்
அவர்களின் அன்புத் தந்தை
அமரர் டானியேல் அன்ரனிப்பிள்ளை

அவர்கள் 25-12-95ஆம் திகதி இறைபதம் அடைந்ததையிட்டு 30ஆம் நாளாகிய இன்று அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

— சமூக அபிவிருத்தி மன்றம்

(40225)

# மக்களின் மகிழ்ச்சிக்கு,
# சேரனின் சிறப்புச் செய்தி!

# "சேரன் புடவை வாணிபம்"



(யாழ். நகரில் இயங்கிவந்த எழினி புடவை வாணிபம்)



## இன்று (24-01-1996) புதன்கிழமை

## கச்சாய் வீதி, சாவகச்சேரியில்

**நண்பகல் 12-00 மணியளவில்**

மங்களகரமாக திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

இங்கு சேலைகள், வேட்டிகள், சேட்டிங், சூட்டிங், நவீன வடிவில் தைத்த ஆடைகள், மற்றும் வியாபாரிகள், தையல் நிலையத்தினருக்கான துணி வகைகளும் பெற்றுக்கொள்ளலாம்.

# சேரன் புடவை வாணிபம்

கச்சாய் வீதி, சாவகச்சேரி. (சி/295 )

Digitized by Noolaham Foundation.

## உதயன்

### பீரிஸின் பீற்றுதல்

இனப்பிரச்சினைத் தீர்வுக்கென அரசாங்கம் தற்போது வெளியிட்டுள்ள சட்ட ஆவணத்தின் அம்சங்கள், தமிழர்களுக்கு அதிஉச்ச உரிமைகளை வழங்கியிருப்பதாக— அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் பீற்றியிருக்கிறார்.

சிங்கள மக்களின் எதிர்ப்பைத் தேடி அவர்களின் வாக்குகளை இழப்பதற்கு எந்தச் சிங்களத் தலைவர்களும் விரும்பமாட்டார்கள் என்பது எவருக்கும் தெரிந்த ஒன்று.

ஆகையால், சிங்களவர்களின் எதிர்ப்பைப் பெரிய அளவில் தேடிக்கொள்ளும் விதத்தில், தனது சட்ட ஆவணத்தில் பெரிதாக மாற்றம் எதனையும் அரசாங்கம் செய்யமாட்டாது என்பது நிச்சயம்.

தமிழர்களின் அதி உச்ச உரிமைகள் என்று பேராசிரியர் பீரிஸ் எவற்றைக் குறிப்பிடுகிறார்?

**தமிழர்க**ளுக்குப் பூரண தன்னாட்சி உரிமை வழங்கும் எந்த அம்சமாவது அவரின் சட்ட ஆவணத்தில் உண்டா?

அவரது சட்ட ஆவணத்தில் இரண்டாவது அட்டவணை என்ற பெயரில் கொழும்பு அரசாங்கத்துக்கும் பிராந்திய சபைகளுக்கும் வழங்கப்படும் அதிகாரங்களுக்குரிய விடயங்கள் நிரலிடப்பட்டுள்ளன.

கொழும்பு அரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 63 விடயங்களையும், பிராந்திய சபைகளுக்குரிய 46 விடயங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அதிகாரம் எந்தளவுக்கு பரவல் செய்யப்பட்டுள்ளது என்பது எவருக்கும் புலனாகும்.

முக்கியமான, காத்திரமான விடயங்கள் யாவுமே கொழும்பு அரசிடம் தான் இருக்கும். வெறும் சில்லறை அதிகாரங்களே பிராந்திய சபைகளுக்குக் கிள்ளிப் போடப்பட்டுள்ளன. ஒரு கையால் கொடுத்து மறு கையால் பறிக்கும் விதத்திலேயே அந்த நிரல் அமைக்கப்பட்டுள்ளது. அதனைவிட பிராந்திய சபைகளை கலைக்கும் அதிகாரமும் மத்திய அரசுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

தமிழர்கள் தமது தாயகத்தில் தன்னாட்சி அதிகாரம் வேண்டும் என்றே கோரி வருகிறார்கள். அது குறித்து எதுவுமே கூறப்பயந்து வடக்கு – கிழக்கு இணைப்பு விவகாரத்தைத் தீர்மானிக்கும் பொறுப்பை வெகு கெட்டித்தனமாக தெரிவுக் குழுவிடம் விட்டு விட்டார் பீரிஸ்.

முழுக்க முழுக்க, சிங்கள இனவாதிகளின் விருப்பு வெறுப்புகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டுத் திருத்தப்பட்டுள்ள இந்தச் சட்ட ஆவணம், தமிழர்களுக்கு உச்ச உரிமைகளை வழங்குவதாகக் கூறுவது சுத்த அபத்தமாகும்.

சிங்களவரும் தமிழரும் இன விவகாரத்தை மூளையால், அறிவால் நோக்காமல், இதயத்தால் உணர்ச்சிவசப்பட்டு நோக்கியதாலேயே அதனைத் தீர்க்க முடியாமற் போயிற்று என்று கூறும் பேராசிரியர் பீரிஸ்—

தனது அறிவால் நோக்கித் தயாரித்த தீர்வு யோசனை தமிழர்களுக்கு உள்ள உரிமைகளைப் புறக்கணித்து விட்டது என்பதே உண்மை.

தமிழர்கள் தமது உரிமைகளைத் தான் கேட்கிறார்கள்; அவற்றுக்காகத் தான் போராடுகிறார்கள். சிங்களவர் தாம் அவர்களுக்குப் பிச்சை போடுவதாக நினைக்கக் கூடாது பேராசிரியரே!

# பங்கீட்டு அட்டை மீளாய்வு
# கால எல்லை நீடிக்கப்படும்

பங்கீட்டு அட்டைகளை மீளாய்வு செய்வதற்கான கால எல்லை மேலும் நீடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பங்கீட்டு அட்டைகளை மீளாய்வு செய்யும் வேலைகள் கடந்த 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது தெரிந்ததே.

மீளாய்வு செய்வதற்கான இறுதித் திகதி 26 ஆம் திகதி என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த குறுகிய கால அவகாசத்துக்குள் மீளாய்வு வேலைகளை பூர்த்தி செய்வதில் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதால் கால எல்லையை மேலும் நீடிக்க உள்ளதாக யாழ் மாவட்ட திட்டப் பணிப்பாளர் திரு. பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

நான்காம் கட்ட நிவாரணப் பொருள் விநியோகத்துக்கு வசதியாக மீளாய்வு வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்—

பொதுமக்கள் தாமதிக்காது பங்கீட்டு அட்டைகளை மீளாய்வு செய்வதற்கு ஒத்துழைக்குமிடத்து இந்தப் பணிகளை விரைவாகச் செய்து முடிக்க முடியும் என்றும் — அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-7)

## குருநாகலிலிருந்து கிளிநொச்சிக்கு கிடுகு

வவுனியா - தாண்டிக்குளம் ஊடாக — குருநாகலில் இருந்து கிளிநொச்சி செயலகத்துக்கு கிடுகுகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏழு லொறிகள் மூலம் ஐயாயிரம் கிடுகுகள் மற்றும் உணவுப் பொருள்கள், பிளாஸ்ரிக் வாளிகள். உடுபுடைவைகள் போன்றவையும் எடுத்துவரப்பட்டன.

சுமார் நான்காயிரம் பிளாஸ்ரிக் கூரைத் தகடுகளும் கிளிநொச்சி செயலகத்துக்கு மிக விரைவில் வந்து சேரும் என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இக் கூரைத் தகடுகள் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு விநியோகிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-ரி)

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

24 — 01 — 1996

இரவு

★ 8-02— தாயகப்பாடல்கள்
★ 8-10 — நாடகம் — வை. கலையரசன் எழுதிய ''ஒரு வெள்ளாடு வேங்கையாகிறது''
★ 8. 30 — செய்திகள்.
★ 8. 40 — அறிவிப்புகள் — தொடர்ந்து 9.00 மணி வரை தாயகப்பாடல்கள்

25 — 01 — 1996

காலை

★ 7. 02 —மாவீரர்வணக்கம்
★ 7-10 — மணியாரம்
★ 7. 30 — செய்திகள்
★ 7. 35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7. 45 அறிவிப்புக்கள்— தொடர்ந்து 8-00 மணி வரை தாயகப்பாடல்கள்.

### பூஜைகள்

தொண்டமனாறுப் பகுதியை நோக்கி அடிக்கடி ஷெல் வீச்சுக்கள் நடைபெற்று வருகின்ற போதிலும் செல்வச் சந்நிதி ஆலயத்தில் பூஜைகள் வழமை போல நடைபெற்று வருகின்றன.

(இ-173-80)

## நிதித்துறை அறிவித்தல்....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ வேலும்மயிலும் கிருபானந்தராசா —பத்தமேனி, அச்சுவேலி.

★ திருமதி முருகானந்தம் விஜயராணி — மே/பா திருமதி விஸ்வநாதன் மரகதவல்லி, உடுவில், சுன்னாகம்.

★ கு. கணபதிப்பிள்ளை நடராஜா — 66/01, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

★ நிக்லஸ் பயஸ் — 13/02, 5ஆம் குறுக்குத்தெரு, தண்ணீர்தாங்கி வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

★ குருசுமுத்து கிறகோரி — 13/02, 5ஆம் குறுக்குத் தெரு, தண்ணீர்தாங்கி, குருநகர், யாழ்ப்பாணம்.

★ செல்வி கௌசி சிதம்பரநாதன் — அரசாங்க வைத்தியசாலை வீதி, உரும்பிராய்.

★ செல்வி துஸ்யந்தி குணபாலன் — 132, கண்டி வீதி, அரியாலை.

★ வி. தெய்வேந்திரம் — 23. சப்பல் வீதி (பறங்கித் தெரு), யாழ்ப்பாணம்.

★ அந்தோனிப்பிள்ளை சைமன் (தியாகு) — 50/03' மவுன்காமல் றோட், குருநகர், யாழ்ப்பாணம்.

★ செபமாலை செபஸ்ரியன் — 815, மத்தியகிழக்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம்

★ அந்தோனிப்பிள்ளை சைமன் (தியாகு) — 50/03, மவுன்காமல் றோட், குருநகர், யாழ்ப்பாணம்.

★ திருமதி நாகேந்திரா சறோஜினிதேவி — ''லக்ஸ்சுமி வாசா'', கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

★ நல்லதம்பி பரந்தாமன் — சிவகுமார் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

★ கதிர்காமு வல்லிபுரம் — M. S. Lane, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

★ பி. ஜோசப் ஜோன்சன் — 55,றக்கா வீதி, யாழ்ப்பாணம்.

★ திருமதி தவநாயகி தம்பித்துரை — ''மணி மாளிகை'', அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

★ செல்வி மதியாபரணம் மாலினி — மே/பா வைத்திலிங்கம் மதியாபரணம், கட்டுவன், தெல்லிப்பளை.

★ திருமதி. சின்னத்துரை சரஸ்வதி — 131/01, கண்டிவீதி, கச்சேரி (யாழ்ப்பாணம்)

★ செல்வி. நந்தினி தனேந்திரன் — 1/16, கச்சேரி நல்லூர், கச்சேரி, யாழ்ப்பாணம்.

★ சுப்பிரமணியம் பவளம் — கோண்டாவில் M. S வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

★ கந்தையா மகேஸ்வரி — அராலி மேற்கு, வட்டுக்கோட்டை.

★ கிறிஸ்ரோப்பிள்ளை யோசப் —16/03, கச்சேரி நல்லூர்வீதி, யாழ்ப்பாணம்.

★ செல்லர் குணரட்ணம் (ஆசிரியர்) — உரும்பிராய் மேற்கு உரும்பிராய்.

★ சிவசிதம்பரம் புவனேஸ்வரி அல்லது ஜெசுதா — சிவகுமார்வீதி, சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.

★ அருணாசலம் ரமேந்திரா — சிவகுமார்வீதி, சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.

★ த. பாலசிங்கம்—சிவன்கோவிலடி, வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை.

★ பொன்னையா முத்துக்குமார் —393, கண்டிவீதி, அரியாலை.

★ திருமதி முடியப்பு குறோனம்மா — 33, மத்திய மேற்குவீதி, குருநகர்.

★ பொன்னுத்துரை மனோரஞ்சிதம்—மதவடிவீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

★ நடராஜா சிறிகாந்தன்—பலாலிவீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

★ செல்லத்துரை அரிச்சந்திரன்—111, நாயன்மார் வீதி, நல்லூர்.

★ முத்தையா இராசேந்திரம் — தியேட்டர் லேன், இணுவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

★ நீக்கிலாப்பிள்ளை ஜூலிஸ் மரியநாயகம் — 16/03 கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

★ செல்லப்பா [illegible] சித்தங்கேணி.

★ திருமதி தம்பிராசா தவமணி — 11, பொன்னம்பலம் ஒழுங்கை, உடுவில் வீதி, மானிப்பாய்.

★ மார்க்கண்டு ஈஸ்வரம் — 175, நாயன்மார்வீதி, நல்லூர்.

★ திருமதி அன்ரன் லூசியா — 6, கண்டி வீதி, குருநகர்.

★ ரி. சிறீஸ்கந்தராசா — 774, நந்தாவில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

★ கந்தையா அரியரட்ணம் — 24/04, சுப்பிரமணியம் வீதி, அரியாலை.

★ டாக்டர் நாகலிங்கம் இராஜநாதன் அல்லது திருமதி ராஜதேவி மயில்வாகனம் — ''பூம்பந்தல்,'' மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்.

★ திருமதி. சிவசுப்பிரகாசம் இலட்சுமி —நவசக்தி, சனசமூக நிலையம் அருகில் உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

★ இலட்சுமணர் கோணேசவரதன் — ''தர்மபதி'' மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.

★ திருமதி அமலதாஸ் வசந்தகுமாரி மே/ப பி. அந்தோனிப்பிள்ளை உயரப்புலம், ஆனைக்கோட்டை.

★ லிங்கரெத்தினம் ஜெகதீஸ்வரி — கந்தையா ரீச்சர் வீதி, கந்தரோடை தெற்கு, சுன்னாகம்.

★ தம்பிப்பிள்ளை புவனேஸ்வரி —டச்றோட், சண்டிலிப்பாய்.

★ திருமதி கந்தையா இராசபூரணம் — 114, திருமகன்வீதி, அரியாலை.

★ கார்த்திகேசு செல்வரத்தினம் — 23,பிரம்புலேன் கொக்குவில்.

★ விஸ்வலிங்கம் செல்லம்மா — 74/04, முள்ளிவீதி, அரியாலை.

★ யோகராணி தங்கராசா—யாழ்வீதி, கோப்பாய், வடக்கு, கோப்பாய்

★ கதிரவேலு சண்முகராசா — மே/பா வே ஞானசூரியர் மஞ்சவண்ணபதி வீதி, கொக்குவில் மேற்கு கொக்குவில்.

★ தம்பிராசா பரமேஸ்வரி — 63, பால்பண்ணை வீதி, திருநெல்வேலி, கிழக்கு. யாழ்ப்பாணம்.

★ முத்தையா இரத்தினசிங்கம் இலங்காதேவி — 13/03, நித்தியானந்தன் வீதி, நல்லூர் வடக்கு. நல்லூர்.

★ செல்வரதி பாலசுப்பிரமணியம் — நாவலடிவீதி, வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.

★ நடராஜா சந்திரராஜா — பிரதான வீதி, சுழிபுரம் தெற்கு, சுழிபுரம்.

★ பொன்னம்பலம் கனகரத்தினம்—''கலாபவனம்'' உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்

★ சபாபதி திருநாவுக்கரசு — செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பு.

★ வேலுப்பிள்ளை சங்கரசேகரம் — மே/பா. தம்பிராசா, கரந்தன், நீர்வேலிமேற்கு, நீர்வேலி.

★ தம்பிப்பிள்ளை பாலசிங்கம் — சிவன்கோவிலடி, வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை.

★ கபிரியல் சூசைமுத்து விக்ரர் — இல. 27, மத்தியூஸ்வீதி, யாழ்ப்பாணம்.

★ பரம்சோதி செல்வநாயகி — நாவற்குழி சந்தி, நாவற்குழி.

★ கார்த்திகேசு வடிவேலு — மே/பா நாகலிங்கம், கரணவாய் வடக்கு, கரவெட்டி.

★ கனகாம்பிகை கிருஸ்ணபிள்ளை — குமாரசிட்டி, மாதகல், பருத்தித்துறை.

★ பராசக்தி பஞ்சலிங்கம் — அரசாங்க வைத்தியசாலை, சாவகச்சேரி.

★ செல்வி யோகராணி சின்னத்துரை — நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி

★ செல்வி செபமணி பீற்றர் — மே/பா. ச. சுந்தரம்பிள்ளை நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

★ திருமதி பரமேஸ்வரி கனகரத்தினம் — மே/பா. மு. சிவப்பிரகாசம் மிருசுவில்.

★ பிரசாந்தி தங்கராசா — அம்மன் கோவில் வீதி, மீசாலை வடக்கு, சாவகச்சேரி.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா படை தாக்குதல்

## ஒருவர் கொல்லப்பட்டார்

சென்னை, ஜன. 24 தமிழ்நாடு நாகபட்டினம் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நான்கு மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததாகவும் —

ஸ்ரீலங்கா படையினர் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் —

அதில் இராமசாமி [44 வயது) என்ற மீனவர் கொல்லப்பட்டதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

(இ-3-7)

### கப்பல்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தன.

அதேசமயம் நேற்று திருகோணமலை புறப்பட்ட 'ஹபரண' கப்பல் காலை 8 மணிக்கே பருத்தித்துறை வந்து சேர்ந்துவிட்டது.

'லங்கா முடித' 'லங்கா கல்யாணி' ஆகிய கப்பல்களை படையினர் தடுத்து வைத்திருந்ததனாலேயே அவை தாமதமாகி பருத்தித்துறை வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறைக்கு பொருள்கள் இறக்க வரும் கப்பல்கள் இரவில் தரிப்பதற்காக காங்கேசன் துறை செல்வது தெரிந்ததே.

(இ-173-15-80)

### ஹாட்லி...

(1 ஆம் பக்கத் தொதர்ச்சி)

அடைந்தனர். இந்த இடம்பெயர்ந்தோர் முகாம் மெதடிஸ்த திருச்சபையினால் நடத்தப்பட்டு வருகிறது.

தொண்டமானாறு, கெருடாவில், மயிலியதனை பகுதிகளை நோக்கியும் நேற்று முன்தினம் 4க்கு மேற்பட்ட ஷெல்கள் ஏவப்பட்டன.

அத்துடன் நேற்று முன்தினம் இரவு கரையோரப் பகுதிகளை நோக்கி கடற்படையினர் கலிபர் தாக்குதல்களையும் நடத்தினர்.

இந்த தாக்குதல்கள் காரணமாக நேற்று வடமராட்சிப் பகுதியில் மீனவர்கள் பலர் தொழிலுக்குச் செல்லவில்லை.

### ஹெலியுடனான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ப்பு ஏதும் கிட்டாமலும் போய் விட்டது.

—இவ்வாறு செய்தி நிறுவனங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஹெலி அல்லது விமானத்துக்கும் கட்டுப்பாட்டு நிலையத்துக்கும் இடையே இடம்பெறும் செய்திப் பரிவர்த்தனையை விடுதலைப் புலிகள் இடைமறித்துக் கேட்பதைத் தவிர்க்கும் ஸ்ரீலங்காப் படைகளின் கொள்கைக்கு ஏற்ப சம்பந்தப்பட்ட ஹெலி புறப்பட்டு சற்று நேரத்தில் கட்டுப்பாட்டு நிலையத்துடனான தொடர்பை விமானி துண்டித்துக் கொண்டார் என்றும்—

இதனால் ஹெலி திடீரென காணாமல் போன சமயம் ஹெலியுடன் கட்டுப்பாட்டு நிலையத்துக்கும் தொடர்பு ஏதும் இருக்கவில்லை என்றும்

படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(உ-3 7)

### ஹெலியை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னங்களும், ஹெலிக்கொப்டர்கள் சிலவும் தேடுதல் முயற்சியில் ஈடுபட்டிருந்தன.

கடற்படையினரின் வேவுப் படகுகள் சிலவும் தேடுதலில் ஈடுபட்டன.

ஆனால் ஹெலிக்கொப்டரையோ அதன் சிதைவுகளையோ படையினரால் கண்டுபிடிக்க முடியவில்லை என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இதனையடுத்து —

வடபகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் இயங்கி வரும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உதவியை நாடுவது என அரசு முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

அரசின் கோரிக்கையை அடுத்து—

சம்பந்தப்பட்ட ஹெலியில் இருந்தவர்களில் யாராவது தப்பிப்பிழைத்திருந்தார்களா என்பதற்கும், அதில் இருந்த எவரையாவது விடுதலைப் புலிகள் கைதிகளாகப் பிடித்துச் சென்றனரா என்பதற்கும் ஆதாரம் ஏதாவது உள்ளதா என்பதை அறியும்படி பருத்தித்துறையில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் அதிகாரியை கொழும்பில் உள்ள அதன் தலைமைப் பிரதிநிதி ஜெராட் கெஸ்டிக்னட் கேட்டிருப்பதாக பி.பி.ஸி. அறிவித்தது.

(உ-3-6-7-15-80-173)

### கிழக்கு....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிம'' சிங்கள வார இதழ் தெரிவித்திருக்கின்றது.

பொலனறுவை மாவட்டத்தின் எல்லையில் உள்ள வெலிகந்தை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாழைச்சேனை ஆகிய பிரதேசங்களுக்கு இடையே அமைந்துள்ள பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கையின்போது, நடவடிக்கையில் ஈடுபட்ட படையினரை இப்பிரதேசத்தில் இருந்த புலிகள் எவரும் எதிர்கொள்ளாமல் இருப்பது இராணுவத்தினருக்கு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் படை நடவடிக்கை பற்றிய தகவல்களை புலிகள் நேரகாலத்துடனேயே பெற்றுவிட்டதால் அவர்கள் படையினரை நேருக்கு நேர் எதிர்கொள்ளாமல் தந்திரமாகப் பின்வாங்கவும்—

அரச படைகள் காடுகளுக்குள் ஆழமாக ஊடுருவிய பின்னர் அவர்கள் மீது பெரும் தாக்குதலைத் தொடுக்கவும்—

முடிவு செய்திருப்பதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கிழக்கில் புலிகளை பூண்டோடு அழிப்பதற்காக படையினரால் ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கை, புலிகளை எதிர்கொள்ள முடியாமல் போனதால் படையினருக்கு பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.— இவ்வாறு 'லக்பிம' மேலும் தெரிவித்துள்ளது.

(உ–10)

### பொறியியல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் போன்றவற்றைச் செயலிழக்கச் செய்யவும் பயிற்சி அளிக்கப்பட்டிருந்ததாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

இத்தகைய சிப்பாய்களை இழந்துள்ள நிலையில் —

இவர்களுக்குப் பதிலாக புதிய சிப்பாய்களைத் தேர்ந்தெடுப்பதோ, அவர்களுக்கு பயிற்சியளிப்பதோ இலகுவான விடயமல்ல என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ-6)

### சிலாவத்துறை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிலாபத்துறை பண்டார வெளியில் மேற்கொள்ளப் பட்ட இத்தாக்குதலில் கிளிமேட்டையைச் சேர்ந்த ம.துரை (வயந் 32) சு.வீரையய்யா (வயது22) ஆகியோர் படுகாய மடைந்தனர்.

(இ-3)

## மரண அறிவித்தல்கள்

### கந்தர் வேலாயுதம்

முருகமூர்த்தி கோவில், சாவல்கட்டு, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், தற்பொழுது கச்சாய் தெற்கு, கொடிகாமத்தில் வசித்தவருமாகிய கந்தர் வேலாயுதம் நேற்று (23–01–96) காலமானார்.

அன்னார் விமலாதேவி, சந்திராதேவி, வெள்ளிமயில் (சிறி), வேலும்மயில் (வவா), வர்ணகுலதேவி (றூபா), ராசன், சற்குணதேவி, சந்திரன் ஆகியோரின் தகப்பனாரும், வீரவாகு, ஆறுமுகநாதன் ஆகியோரின் மாமனாரும், செல்லக்கண்டுவின் அன்புக் கணவரும் ஆவார்.

இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்;
மனைவி, பிள்ளைகள்

வாரித்தம்பு சிவசெம்பு,
கச்சாய் தெற்கு,
கொடிகாமம் (துறைமுகத்தடி) (40006)

### தம்பாப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

புங்குடுதிவு 1ஆம் வட்டாரத்தைச் பிறப்பிடமாக கொண்டவரும், தற்போது 25A மெசிஞ்சர் வீதி கொழும்பு 12ல் வசிப்பவருமாகிய தம்பாப்பிள்ளை பாலசுப்பிரமணியம் 23-1–96 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை இராசம்மாவின் அன்பு மகனும், கன்னையா சிரோன்மணியின் மருமகனும், மஞ்சுலகுமாரியின் அன்புக் கணவரும், விஜித்தா [சுவிஸ்], சஞ்சீவ்கரன், துசித்தா, றஜித்தா, ரஜீவ்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியமூர்த்தியின் [சுவிஸ்] அன்பு மாமனாரும், மகேஸ்வரி, பரமேஸ்வரி, கனகம்மா, தவமணி, மோகனராணி, கனகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தம்பிஐயா, காலஞ்சென்ற வைத்திலிங்கம், கனகலிங்கம், பொன்னுத்துரை, சண்முகராசா, கலாநிதி, விஜயகுமார், வசந்தகுமார், பிரேமலதா, புஸ்பலதா, காலஞ்சென்ற பிரேமகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை 27-1-96 சனிக்கிழமை மாலை 4. 00 மணிக்கு கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
தவமணி பொன்னுத்துரை
[சகோதரி]

கொழும்புத்துறை
[40240]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தங்கமுத்து துரையப்பா

தோப்பு அச்சுவேலியைச் சேர்ந்த திருமதி தங்கமுத்து துரையப்பா நேற்று கரவெட்டி கிழக்கில் காலமானார்.

இவர் பொன்னம்பலம் துரையப்பா (இளைப்பாறிய இலங்கை வங்கி உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், கயிலைநாதன், சிதம்பரநாதன் (வைத்திய கலாநிதி—லண்டன்), லோகநாதன் (கணக்காளர் — லண்டன்), பாக்கியநாதன் (சட்டத்தரணி), செல்வநாதன் (கணக்காளர் — கனடா), சாந்தினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும்—

செல்வமணி, கௌரி (லண்டன்), திலகவதி (லண்டன், மீனாம்பிகை [சட்டத்தரணி], செல்வமங்கை (கனடா), பாலேஸ்வன்ர (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், கங்கா, தயாபரன், பவித்ரா, தாரகா, ஜனிதா, யதுகுலன், ஸ்ரீதரன், கௌதம், செல்வன் ஆகியேரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கரவெட்டி கிழக்கில் இன்று 24-1-96 பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும்.

தகவல்:
து. கயிலநாதன்
(மகன்)

செங்குந்தர் வீதி,
கரவெட்டி கிழக்கு
[40241]

### ஆறுமுகம் சண்முகம்

(ஓய்வுபெற்ற சுகாதார இலாகா ஊழியர்)

கைதடியைப் பிறப்பிடமாகவும், கல்லூரி வீதி, சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த ஆறுமுகம் சண்முகம் 23 - 01 - 1996 அன்று காலமானார்.

இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், குணசேகரன் (பிரான்ஸ்), சந்திரசேகரம் (ஜேர்மனி), சுகிர்தன் (மாணவன், சா/ இந்துக் கல்லூரி), கலாநிதி, தயாநிதி, கருணாநிதி (சுவிஸ்), சுதாநிதி, சுகுணாநிதி ஆகியோரின் அன்புத் தந்தையும், விசுவலிங்கம், முத்துலிங்கம், நடனசிவராசா, (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-01-96) காலை 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. முத்துலிங்கம்
(மருமகன்)

கல்லூரி வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.
(40004)

சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகளின் சங்கமமாக விளங்குகின்ற

**யாழ். ராசி சில்க்ஸ் (ராசி பட்டுச் சோலை)**

தற்பொழுது இரு வேறு இடங்களில்

ராசி சில்க்ஸ்,
(புகையிரத நிலைய முன்பாக)
கொடிகாமம்.

(பட்டுப் புடைவைகளின் சங்கமம்)

ராசி சில்க்ஸ்,
(மகாத்மா திரையரங்கு முன்பாக)
நெல்லியடி. (சி/2943)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) [illegible] சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிக பணிமனையில் 24-01-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.